மணமக்களுக்கு முதல்வர் வாழ்த்து

▶ சென்னையில் நேற்று நடைபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி என்.செந்தில்குமார் மகள் தீபாஞ்சலி - சூர்யநாராயணன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் ஆ.ராசா எம்.பி., முன்னாள் எம்எல்ஏ சங்கரி நாராயணன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர்.

சிபிஎஸ்இ 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாகிறது

சென்னை, மே 13: சிபிஎஸ்இ நடத்திய 10 மற்றும் 12ம் வகுப்புகளுக்கான தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் என்னும் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் படித்த 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் கடந்த மார்ச் மாதம் நடந்தது. இந்த தேர்வில் நாடு முழுவதும் 38 லட்சம் பேர் பங்கேற்றனர்.

இந்நிலையில் தேர்வு முடிவுகள் மே 20ம் தேதிக்குள் வெளியாகும் என்று சிபிஎஸ்இ அறிவித்து இருந்தது. முதலில் 12ம் வகுப்புக்கான தேர்வு முடிவுகளை மே 12ம் தேதி வெளியிடலாம் என சிபிஎஸ்இ திட்டமிட்டு இருந்தது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக நேற்று வெளியாகவில்லை என்று கூறப்படுகிறது.

இருப்பினும் 12ம் வகுப்புக்கான தேர்வு முடிவுகளை முதலில் வெளியிட வேண்டும் என்பதில் சிபிஎஸ்இ உறுதியாக இருக்கிறது.

விரைவில் வெளியிடும் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. தேர்வு எழுதியுள்ள மாணவ மாணவியர் சிபிஎஸ்இ இணைய தளத்தில் தங்களின் பிறந்த தேதி மற்றும் 6 இலக்க தேர்வு எண்ணை பதிவு செய்து தேர்வு முடிவுகளை தெரிந்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உடல் உறுப்பு தானம் செய்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

சென்னை, மே 13: புற்று நோய், பிறவிக் குறைபாடு, தீக்காயம் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அறுவை சிகிச்சையின் மூலம் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்த வகையில், ஒவ்வொரு வருடமும் உடல் மாற்று அறுவை சிகிச்சை செய்பவர்களுக்கு மாற்று உறுப்பு தேவைப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு இன்மை காரணமாக, நாள்தோறும் ஏராளமான விபத்துகள் ஏற்படுகின்றன. இதனால் பெரிய அளவிலான உடல் காயங்களும், சில நேரங்களில் மூளைச்சாவு ஏற்படும் அபாயமும் நிலவுகிறது. ஆனால், இது போன்றவர்களின் உடல் உறுப்புகள் யாருக்கும் பலனில்லாமல் வீணாகிறது. உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு இல்லாததும் இதற்கான முக்கிய காரணம்.

இதனால் பொதுமக்களிடயே விழிப்புணர்வு ஏற்படுத்த உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களுக்கு, அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெறும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் அறிவித்தார்.

அதன்படி, மூளைச் சாவு அடைந்த நபர்களின் உறவினர்கள், உடல் உறுப்பு தானம் அளிக்க ஒப்புதல் அளித்தவுடன், உடல் உறுப்புகள் பெறப்படுகிறது. தொடர்ந்து அந்தந்த மாவட்ட நிர்வாகம் சார்பில் உடல் உறுப்பு தானம் செய்தவரின் இல்லத்தில் நடைபெறும் இறுதிச்சடங்கில் அரசு மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

முதல்வரின் இந்த அறிவிப்பால் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக கடந்த 4 மாதத்தில் மட்டும் இது வரை 100-க்கு மேற்பட்ட இறந்தவர்களின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் சாதனை ஆகும். 2023ம் ஆண்டு 178 நபர்களும் 2022ம் ஆண்டு 156 நபர்களும் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர்.

குறிப்பாக இந்த ஆண்டு மே 9 தேதி வரை 102 நபர்களிடம் இருந்து மொத்தம் 324 முக்கிய உறுப்புகள் மற்றும் 271 திசுக்கள் மீட்டெடுக்கப்பட்டன. அதுமட்டுமின்றி இரண்டு கைமாற்று அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது.

கூகுள் மேப்பை நம்பி முட்டுச்சந்துக்குள் சென்றதால் விபரீதம்

வீட்டு வாசலில் தூங்கியவர்கள் மீது காரை ஏற்றிய மும்பை பெண் கைது

2 பெண்களுக்கு எலும்பு முறிவு, 5 பேர் படுகாயம்

சென்னை, மே 13: கூகுள் மேப்பை நம்பி மகாராஷ்டிரா மாநில பெண் ஒருவர் முட்டுச்சந்துக்குகள் காரை இயக்கியதால் வீட்டு வாசலில் தூங்கிய 2 பெண்களுக்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. மேலும் இந்த விபத்தில் 5 பேர் காயமடைந்தனர். விசாரணையின் இறுதியில் வாகனத்தை இயக்கிய அந்த பெண், குடிபோதையில் இருந்தது தெரியவந்தது.

சென்னை அசோக்நகர் 10வது தெருவை சேர்ந்தவர் சரிதா. இவர் வீட்டில் நேற்று முன்தினம் சுப நிகழ்ச்சி நடந்தது. இதற்காக வெளியூர்களில் இருந்து வந்த இவரது உறவினர்கள் சிறிய வீடு என்பதால் 7 பேர் மட்டும் வீட்டின் முன்பு வாசலில் படுத்து தூங்கினர். இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணிக்கு கார் ஒன்று வீட்டு வாசலில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த 7 பேர் மீது சடசடவென ஏறியது. இதனால் தூங்கிக் கொண்டிருந்த 4 பெண்கள் உட்பட 7 பேரும் படுகாயமடைந்து வலி தாங்க முடியாமல் அலறி துடித்தனர்.

▶ சென்னை அசோக் நகர் 10வது தெருவில் வீட்டு வாசலில் தூங்கியவர்கள் மீது இளம்பெண் கார் (உள்படம்) ஏற்றி விபத்து ஏற்படுத்திய இடம்.

▶ காரை ஓட்டி வந்த இளம் பெண் வைஷாலி.

▶ விபத்தில் காயமடைந்த பெண்ணுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதனிடையே விபத்தை ஏற்படுத்திய கார், நிற்காமல் செல்லவே அங்கிருந்தவர்கள் காரை துரத்திச் சென்றனர். அப்போது நல்வாய்ப்பாக சாலையின் முட்டுச்சந்தில் கார் வேகமாக செல்ல முடியாதவாறு நின்று விட்டது. உடனே பொதுமக்கள் காரை இயக்கிய பெண்ணை பிடித்து அடிக்கப் பாய்ந்தனர். ஆனால் அவர், காரின் கண்ணாடியை திறக்காமல் அதிர்ச்சியில் அமர்ந்துவிட்டார்.



தகவல் அறிந்த போக்குவரத்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, படுகாயமடைந்த 4 பெண்கள் உட்பட 7 பேரை ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இந்த விபத்தில் காயம் அடைந்த 7 பேரில் சரிதா மற்றும் பிள்ளைநாயகி ஆகிய 2 பேருக்கு மட்டும் இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. மற்றவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இதைத்தொடர்ந்து விபத்தை ஏற்படுத்திய பெண்ணிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில், சொகுசு காரை இயக்கி வந்தது மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த வைஷாலி (41) என்றும், இவர் சென்னை அசோக்நகரில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்தபோது வழி தெரியாததால், 'கூகுள் மேப்' மூலம் அசோக் நகர் 10வது தெரு வழியாக சென்றதாகவும், அப்போது இந்த விபத்து நடந்ததும் தெரிய வந்தது.

கூகுள் மேப் தவறாக வழிகாட்டியதால் இந்த விபத்து நடந்தது என்றும், வேண்டுமென்றே இந்த விபத்தை ஏற்படுத்தவில்லை என்றும் வைஷாலி போலீசாரிடம் கூறினார்.

இதைத்தொடர்ந்து போலீசார் வைஷாலியை கைது செய்து பரிசோதனைக்கு உள்ளாக்கினர். இதில் அவர் மது அருந்தி இருந்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து வைஷாலி மீது மதுபோதையில் வாகனம் இயக்கியது தொடர்பாகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கூகுள்மேப் தவறாக வழிகாட்டியதால், வீட்டு வாசலில் தூங்கிய 7 பேர் மீது கார் ஏறி இறங்கிய சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அட்சயதிருதியை ஒட்டி 2 நாட்களில் மட்டும்

₹15 ஆயிரம் கோடிக்கு நகைகள் விற்பனை

சென்னை, மே 13: அட்சய திருதியை ஒட்டி 2 நாட்களில் மட்டும் தமிழகத்தில் 15 ஆயிரம் கோடிக்கு நகைகள் விற்பனையாகி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தாண்டு அட்சயதிரிதியை கடந்த 10ம் தேதி அதிகாலை 4.56 மணிக்கு தொடங்கி 11-ம் தேதி மதியம் 2.50 மணிக்கு முடிவடைந்தது. 2 நாட்களும் அட்சய திரிதியை விற்பனை என்பது தமிழகம் முழுவதும் களை கட்டியிருந்தது. குறிப்பாக சென்னையில் நகை வாங்க கடைகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இதுகுறித்து சென்னை தங்கம், வைர வியாபாரிகள் சங்க பொதுச்செயலாளர் சாந்தகுமார் கூறியதாவது:

கடந்த ஆண்டு மட்டும் அட்சய திருதியை அன்று ரூ.11 ஆயிரம் கோடிக்கு தங்கம் விற்பனை ஆனது. இந்தாண்டு 40 சதவீதம் அளவுக்கு விற்பனை அதிகரித்துள்ளது. அதாவது, தங்கம் விலை என்பது 20 சதவீதமும், அதேநேரத்தில் விற்பனை 20 சதவீதமும் அதிகரித்து காணப்பட்டது. 2 நாட்களில் மட்டும் 22 ஆயிரம் கிலோ அளவுக்கு தங்கம் விற்பனையானது.

இதில் தங்கத்தின் மதிப்பு மட்டும் ₹14,500 கோடி அளவுக்கு இருக்கும். வெள்ளி உள்ளிட்ட நகைகள் சுமார் 500 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தத்தில் ₹15 ஆயிரம் கோடிக்கு விற்பனை நடந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

அரிய வகை நோயான தலசீமியா அதிகரிப்பு

இந்தியாவில் ஆண்டுக்கு 15,000 குழந்தைகள் பாதிப்பு

சென்னை, மே 13: உலகில் 8 ஆயிரம் அரிய வகை நோய்கள் இருப்பதாகவும், அவற்றை கொண்டிருப்பவர்கள் 40 கோடிப் பேர் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் கணக்கு 450 அரிய வகை நோய்களும், 7 கோடி மக்கள் இதனால் பாதிக்கப்படுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. குறிப்பிட்ட மக்கள்தொகையில் குறைந்த அளவில் ஏற்படும் நோய்களை 'அரிய வகை நோய்கள்' (Rare Diseases) என்று வரையறுத்திருக்கின்றனர். இதில் அரிய வகை நோயான தலசீமியா நோய் தற்போது அதிகமாகி வருகிறது. தலசீமியா என்பது ஒரு பரம்பரையாக ஏற்படும் மரபணு ரத்தக் கோளாறு நோய் ஆகும். உடலுக்குத் தேவையான ஹீமோகுளோபினை உடலால் உருவாக்க முடியவில்லை என்பதுதான் இதன் குறைபாடு. ரத்தத்தின் சிவப்பணுக்களில் இருக்கும் ஹீமோகுளோபின் என்ற புரதம்தான் உடலின் பல பகுதிகளுக்கும் ஆக்சிஜனை கொண்டு செல்லும் முக்கியமான வேலையை செய்கிறது. அதன்மூலம்தான் நமக்கு சக்தி கிடைக்கிறது. ரத்தத்தில் சிவப்பணுக்கள் இல்லை என்றால், உடலில் ரத்த ஓட்டம், உற்பத்தி என்று எல்லாமே பாதிக்கப்படும். குறிப்பாக, தீவிரமான ரத்த சோகை, மூச்சுத் திணறல், மற்றும் சீரற்ற இதயத் துடிப்பு ஆகியவை ஏற்படும். பிறந்த குழந்தைக்கு ஆறு மாதங்களில் தொடங்கும் இந்த நோய் வாழ்நாள் முழுமைக்கும் இருக்கும். இவர்களுக்கு ஆயுள் முழுவதும் சிகிச்சை தேவைப்படுகிறது. இந்த மரபணு நோய் பற்றி போதுமான விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் குழந்தை பிறந்த சில ஆண்டுகளில் குழந்தை இறந்துவிடுகிறது.

தலசீமியா நோய் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தலசீமியா இன்டர்நேஷனல் ஃபெடரேஷன் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை முன்வைக்கிறது. அந்த வகையில் இந்த ஆண்டு "வாழ்க்கையை மேம்படுத்துதல், முன்னேற்றத்தைத் தழுவுதல், அனைவருக்கும் சமமான மற்றும் அணுகக்கூடிய தலசீமியா சிகிச்சை" (Empowering Lives, Embracing Progress: Equitable and Accessible Thalassemia Treatment for All) என்ற கருப்பொருள் முன்னிறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

தலசீமியா அறிகுறிகள் என்னென்ன ?

தலசீமியா அறிகுறிகள் தெளிவாக தெரிவதில்லை. இருப்பினும் பொதுவான அறிகுறிகளாக சொல்லப்படுவது வயிற்றுப்பகுதியில் வீக்கம், இருண்ட அடர்ந்த சிறுநீர், லேசான தலைச்சுற்றல், மஞ்சள் நிற தோல், சோர்வுமற்றும் பசியின்மை, வளர்ச்சி குறைபாடு அதாவது தாமதப்படுத்தப்பட்ட வளர்ச்சி, முக எலும்பு சிதைவுகள் உள்ளிட்டவை ஏற்படும்.

தமிழ்நாட்டில் அதிகரிப்பு: அரசு நடவடிக்கை

தமிழகத்தில் தலசீமியா நோய் அதிகரித்து வருகிறது. குறிப்பாக கிருஷ்ணகிரி, நீலகிரி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டத்தில் பழங்குடி மக்களிடையே இந்த தலசீமியா நோய் அதிகமாக ஏற்படும். மலைகள் பகுதிகளில் இருக்கும் மக்களுக்கும் இந்த நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இந்த பகுதிகளில் இருக்கும் நபர்களுக்கு அவ்வப்போது ரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சொந்தத்தில் திருமணம் முடிப்போருக்கு எளிதில் ஏற்படுகிறது

மருத்துவர்கள் தகவல்

உலக அளவில் தலசீமியா நோயால் பாதிப்படைந்த குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 3,00,000 முதல் 5,00,000 ஆக அதிகரித்துள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், சீனா, ஆப்பிரிக்க கண்டத்தில் சில பகுதிகளில் வாழும் மக்களிடம் ஆல்பா தாலசீமியா நோயின் பாதிப்புகள் அதிகம் காணப்படுகிறது. மேலும் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15,000 குழந்தைகள் தலசீமியாவுடன் பிறக்கின்றன. இதில் 4 சதவீதம் பாதிப்பு தமிழ்நாட்டில் ஏற்படுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. பொதுவாக இந்த ஆல்ஃபா தலசீமியா, பீட்டா தலசீமியா என்ற இரண்டு வகை தலசீமியா உள்ளது. இதில் ஆல்ஃபா தலசீமியா அரிதாக வரும். ஆனால் பீட்டா தலசீமியா அதிகமாக பாதிக்கக்கூடியவையாகும். சொந்தத்துக்குள் திருமணம் செய்தால் தலசீமியா நோய் வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக காவேரி மருத்துவமனை ரத்த சிகிச்சை நோய் நிபுணர் அர்சத் ராஜா கூறியதாவது: தலசீமியா மரபணு நோய் ஆகும். பெற்றோர்களிடம் இருந்து குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய். தலசீமியா மேஜர் (major), தலசீமியா மைனர் (minor) , தலசீமியா இடைநிலை (intermedia) பாதிப்பு என்று மூன்று வகையில் இந்த தலசீமியா பாதிப்பு உள்ளது. தலசீமியா மேஜர் உடைய குழந்தைகள் ஆல்ஃபா மற்றும் பீட்டா தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டு இருப்பார்கள். அவர்களுக்கு 2 அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை ரத்தம் மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். அது மாற்றினாலும் ஐயன் (iron) உள்ளிட்டவை அதிகரிக்கும், அதிகபட்சமாக 40 முதல் 50 வயது வரை வாழ்வார்கள். அப்படி இல்லையென்றால் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை செய்தால் ஓரளவு காப்பாற்ற முடியும். கருத்தரித்த பெண்கள் கர்ப்பக்கால பரிசோதனை மேற்கொள்ளும் போது தலசீமியா ரத்தத்தில் இருக்கிறதா என்ற பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். சொந்தத்துக்குள் திருமணம் செய்தால் இந்த நோய் வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

தலசீமியா மரபணு நோய் என்பதால் ஒரு குடும்பத்தில் தலசீமியா மைனர் இருந்து அவர்கள் திருமணம் செய்யும் உறவினரும் தலசீமியா மைனர் இருந்தால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைக்கு 25% தலசீமியா மேஜர் உடன் பிறக்க வாய்ப்புள்ளது. இந்த தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டால் சிகிச்சை மேற்கொள்ள 10 -15 லட்சம் வரை செலவு ஏற்படும். இதில் ஒரு மகிழ்ச்சியான செய்தி என்றால் இந்த நோய்க்கான சிகிச்சையை முதல்வர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

ஜேஎம் நிதி சொத்து மறுசீரமைப்பு நிறுவனம் லிமிடெட் JM FINANCIAL

நிறுவன அடையாள எண்: U67190MH2007PLC174287
Regd. அலுவலகம்: 7வது தளம், க்னெர்ஜி, அப்பாசாஹேப் மராத்தே மார்க், பிரபாதேவி, மும்பை - 400 025
பெங்களூர் அலுவலகம்: 4வது தளம் பசப்பா வளாகம், லாவெல்லே சாலை, லேண்ட்மார்க் - ரோட்டரி கிளப் அருகில், பெங்களூர் - 560 001. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி: விக்ரம் ஷெட்டி, மின்னஞ்சல்- Vikram.s@jmfl.com,
மொபைல்: +919880405324, +919964554503 தொலைபேசி + 080 4927 2491 இணையதளம்: www.jmfinancialarc.com

அசையும் மற்றும் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு
[பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 விதி 6 மற்றும் விதி 9(1) ஐப் பார்க்கவும்]

2002 ஆம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 6 மற்றும் விதி 9(1) உடன் படிக்கப்படும், 2002 ஆம் ஆண்டின் நிதிச் சொத்துகளின் பத்திரமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கத்தின் கீழ் அசையும் மற்றும் அசையா சொத்துகளை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், அதன் கீழ் செயல்படும் JM ஃபைனான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது/ கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்று பொதுவாக பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்குபவர் மற்றும் அடமானம் கொள்பவர்களுக்கும் (கள்) மற்றும்/அல்லது உத்தரவாதம் அளிப்பவர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. JMFARC-ஃபெடரல் வங்கியின் அறங்காவலராக இருக்கும் திறன் மார்ச் 2013 - பாதுகாப்பான கடனாளியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் கையகப்படுத்தப்பட்ட அறக்கட்டளை (**"பாதுகாப்பான கடனாளி"**) **"எங்கே இருக்கிறதோ, அப்படியே", "எப்படி இருக்கிறதோ அதுபோல்", "இருப்பது போல்", "எது இருக்கிறது"** "என்பதில் விற்கப்படும். அடிப்படையில் **ஜூன் 03, 2024 அன்று மதியம் 02:00 முதல் 03:00 வரை ரூ.55,09,53,029/- (ரூபாய் ஐம்பத்தைந்து கோடி ஒன்பது இலட்சம் ஐம்பத்து மூவாயிரத்து இருபத்தி ஒன்பது மட்டும்)** M/s. KJ மருத்துவமனை ஐ நோக்கி செலுத்த வேண்டும். மார்ச் 31, 2024 இன் படி ஒப்பந்த விகிதங்களில் வட்டி மற்றும் எதிர்கால செலவு மற்றும் பிற செலவுகள்/ கட்டணங்கள் ஆகியவற்றுடன் (1) M/s KJ **மருத்துவமனை ("கடன் வாங்கியவர்")** மற்றும் அடமானம் கொள்பவர்கள் மற்றும் /அல்லது உத்தரவாதமளிப்பவர்கள் அதாவது (2) **திரு. A. பத்ருதீன் (3) டாக்டர். P. S. சதாசிவம் (4) திரு. I. M. ராபர்ட் (5) திருமதி. ஃபஜிதா பத்ருதீன் (6) திருமதி. S. பாத்திமா ராணி (7) திரு. S. சுவாகின். தேவசகாயன் மற்றும் (8) திருமதி. ரத்தம்மாள்,** சொத்தின் விரிவான விளக்கம், அதன் கையிருப்பு விலை மற்றும் ஈட்டப்பட்ட பண வைப்பு பின்வருமாறு:

வ.எண்	சொத்து விளக்கம்	இருப்பு விலை	முன் வைப்பு தொகை
1	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, குனியமாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள Sy எண். 671/2A இல் உள்ள 14.618 சென்ட் நிலத்தின் அளவு மற்றும் விற்பனைப் பத்திரம் எண். 3717/2008, 4359/06, 4357/06 மற்றும் 4321/94, கூட்டு 2, SRO, கோயம்புத்தூர் தற்போதுள்ள அல்லது கட்டப்படவிருக்கும் அனைத்து கட்டிடங்களும். **எல்லைகள்:** I) **தளம் எண்: 27** வடக்கு: 30 அடி அகலம் கிழக்கு-மேற்கு சாலை, தெற்கு: தளம் எண் 28, கிழக்கு: வடக்கு தெற்கு சாலை, மேற்கு: தளம் எண் 26 II) **தளம் எண் 28** வடக்கு: தளம் எண் 26 & 27, தெற்கு: தளம் எண் 29, கிழக்கு: வடக்கு தெற்கு சாலை, மேற்கு, தளம் எண் 24 **A. பத்ருதீன், ஃபாஜிதா பத்ருதீன், P.S. சதாசிவம் மற்றும் I.M. ராபர்ட் ஆகியோருக்கு சொந்தமானது.** **KJ மருத்துவமனைக்குச் சொந்தமான அசையும்** சொத்துக்களுடன் மற்றும் அசையும் சொத்துக்களின் விரிவான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. டெண்டர் ஆவணத்தில். (அசையும் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ. 25,00,000/-)	ரூ. 5,00,00,000/- (ரூபாய் ஐந்து கோடி மட்டும்)	ரூ. 50,00,000/- (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்)

அறியப்பட்ட சுமைகள்: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கோயம்புத்தூர் நகர மாநகராட்சி-தெற்கு மண்டலம் அதன் உதவி ஆணையர் மூலம் ஜனவரி 27, 2023 தேதியிட்ட அறிவிப்பின் மூலம் ரூ. 11,61,440/- சொத்து வரி செலுத்த வேண்டும் 2011-2022 முதல் லாட் எண்.1 எனக் குறிப்பிடப்பட்ட சொத்தின் மீது.

ஏப்ரல் 06, 2024 தேதியிட்ட அறிவிப்பு, விதிகளின் 8(6)-ன் கீழ் கடன் வாங்குபவர்கள்/உத்திரவாததாரர்கள்/அடமானம் வைத்திருப்பவர்களுக்கு, பிரிவு 13(8)ன் கீழ் மீட்பதற்கான உரிமை கிடைப்பதைத் தெரிவிக்கிறது.

SARFAESI சட்டம், 2002. கடன் வாங்குபவர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானம் கொள்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் உரிமையைப் பயன்படுத்தத் தவறியதன் காரணமாக, இந்த அறிவிப்பை வெளியிடுவது அவர்களுக்குக் கிடைக்கும் உரிமையை அணைத்துவிடும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, பாதுகாக்கப்பட்ட கடனாளியின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது https://www.jmfinancialarc.com/Home/AssetsForSale அல்லது https://www.bankauctions.in

எஸ்டி/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஜேஎம் ஃபைனான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்
JMFARC-Federal Bank மார்ச் 2013- அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படும்.

தேதி: மே 13, 2024
இடம்: பெங்களூரு